24 ஜூன் 2021

**<u>துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதியினால் வழங்கப்படும் மன்னிப்பின் மீதான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று குழுவினது அறிக்கை</u>**

சட்டவிரோதமான ஒன்றுகூடல் மற்றும் கொலைக்காக மேல்நீதிமன்றினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு, பிரதம நீதியரசர் கௌரவ பிரியசாத் தேப் தலைமையிலான உச்ச நீதிமன்றத்தின் அமர்வு பிரிவினால் ஏகமனதாக உறுதிப்படுத்தப்பட்ட கைதியான, துமிந்த சில்வாவிற்கு, அதிமேதகு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்படுவது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று குழுவினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 34(1) ஆம் சரத்தானது சட்டப்பூர்வ கலந்தாலோசனைகளுடனோ அன்றியோ அத்தகைய மன்னிப்பினை வழங்க ஜனாதிபதியை அனுமதித்தாலும், 34(1) ஆம் சரத்தின் ஏற்பாடானது குற்றவாளியிற்கு மரண தண்டனை விதித்த நீதிபதிகளிடமிருந்து ஒரு அறிக்கையினை ஜனாதிபதி கோரவேண்டுமென்பதை தேவைப்படுத்துகின்றது. அத்தகைய அறிக்கையானது சட்டமா அதிபரின் ஆலோசனையிற்காக அனுப்பப்படவேண்டும் என்பதுடன் தன்னுடைய பரிந்துரைகளை ஜனாதிபதியிற்கு சமர்ப்பிக்க வேண்டியவரான நீதி அமைச்சரிற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையானது வழங்கப்படவேண்டும் என்பதனையும் அவ் ஏற்பாடு தேவைப்படுத்துகின்றது.

விசாரணை நீதிபதிகளது அறிக்கை, சட்டமா அதிபரது ஆலோசனை மற்றும் கௌரவ நீதி அமைச்சரது பரிந்துரைகள் என்பவற்றிற்கு இணங்க மேற்குறித்த மன்னிப்பானது வழங்கப்படுகின்றதா என்பதனை அறிவது பொது மக்களது உரிமையாகும். அதன்படி, அத்தகைய அறிக்கை, ஆலோசனை அல்லது பரிந்துரைகளையும் அவ்வாறு காணப்படுமாயின் அவை துமிந்த சில்வாவிற்கு அம்மன்னிப்பை உண்மையில் பரிந்துரைத்தனவா என்பதனையும் பொதுமக்களிற்கு அறியத்தருமாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்களை இ.ச.ச. ஆனது கோருகின்றது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் மன்னிப்பதற்கான அதிகாரத்தினையும் ஆற்றலையும் கொண்டிருப்பினும், அத்தகைய ஆற்றலானது எப்பொழுதும் சட்டப்படியே செயற்படுத்தப்படவேண்டும். அத்தகைய அதிகாரங்கள் தன்னிச்சையாகவும் தேர்வுக்குரியதாகவும் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது.

இ.ச.ச. ஆனது, மன்னிப்பு வழங்கப்படுவதற்காக கைதிகள் தேர்வுசெய்யப்படுவதற்கான அடிப்படைகளை நியாயப்படுத்துவதற்கான எந்தவொரு ஆவணமுமின்றி தேர்ந்தெடுத்த மன்னிப்புக்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களிலும் காணப்பட்டன என்பதனையும், இ.ச.ச. ஆனது தற்பொழுது எடுத்துள்ள ஸ்திரமான நிலைமைகளையே அப்பொழுதும் மேற்கொண்டிருந்தது என்பதனையும் மனங்கொள்கிறது.

மேற்கூறப்பட்ட சூழ்நிலையில், இ.ச.ச. ஆனது அதிமேதகு ஜனாபதி அவர்கள் இ.ச.ச. இற்கும் பொதுமக்களிற்கும் வெளிப்படுத்துமாறு அதிமேதகு ஜனாதிபதி அவர்களிற்கு எழுதி வேண்டிக்கொண்டதானவை:-

(அ) அரசியலமைப்பின் 34(1) ஆம் சரத்தின் கீழ் பொது மன்னிப்பு வழங்கும் நோக்கத்திற்காக என்ன அடிப்படையில் துமிந்த சில்வா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் ;

(ஆ) அத்தகைய மன்னிப்பு வழங்கப்படுவதில் கருத்திற்கொள்ளப்பட்ட சூழ்நிலைகள் ;



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Rajeev Amarasuriya | Rajindh Perera | Pasindu Silva |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

(இ) தற்பொழுது தண்டனை பெற்றுள்ள ஏனையவர்களிலிருந்து துமிந்த சில்வாவின் வழக்கினை வேறுபடுத்தும் காரணிகள் ;

(ஈ) துமிந்தா சில்வாவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு முன் பிரிவு 34 (1) இன் படி, விசாரணை நீதிபதிகளிடமிருந்து ஒரு அறிக்கை கேட்கப்பட்டதா என்பதும் அவ்வாறாயின் அவ் ஆலோசனையின் உள்ளடக்கங்கள

(உ) துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கு முன்னதாக சட்டமா அதிபரது ஆலோசனைகள் கேட்கப்பட்டதா என்பதும் அவ்வாறாயின் அவ் ஆலோசனையின் உள்ளடக்கங்கள் ;

(ஊ) துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கு முன்னதாக நீதி அமைச்சரது பரிந்துரைகள் பெறப்பட்டவனவா என்பதும் அவ்வாறாயின் நீதி அமைச்சர் மேற்கொண்ட பரிந்துரைகள்;

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது, மேற்கூறப்பட்ட கலந்தாலோசனைகளில் ஏதேனும் ஒன்றோ அல்லது பலவோ, இவ்வழக்கில் பூர்த்திசெய்யப்படாதிருந்தால், துமிந்த சில்வாவிற்கு வழங்கப்படும் மன்னிப்பானது காரணமற்றதும் தன்னிச்சையானதும் என்பதுடன் சட்டவாட்சியின் அழிவிற்கு வழிவகுப்பதுடன் நீதியின் நிர்வாகத்தின் மீது பொது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் அற்றுப்போகச் செய்யும் எனும் நிலையினை தொடர்வதாயுள்ளது.

தங்கள் உண்மையுள்ள,

**ரஜீவ் அமரசூரிய**
**செயலாளர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva
No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk